**வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றம், திருவாரூர்**

**2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 03 ம் நாள் திங்கள்கிழமை**

**RLTOP No. 2/2023**

**வா.சா.1**

**நூர்முகமது , த/பெ. அப்துல்கனி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :

ஸ்தலத்தில் உள்ள நான்கெல்லை விபரமும், மனுவில் சொல்லியுள்ள நான்கெல்லை விபரமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூ.78,000/- வாடகை பாக்கி உள்ளதாக சொல்வது எந்த காலத்திலிருந்து என்றால் 2021 ம் ஆண்டு 2 வது மாதத்திலிருந்து பாக்கி உள்ளது. அதற்கு முன்பாக வாடகை செலுத்தியதற்கு வாடகை ரசீது தாக்கல் செய்துள்ளேன். 1999 ம் ஆண்டிலிருந்து 2020 வரை வாடகை செலுத்தியதற்கு ஆவணம் உள்ளதா என்றால் என்னிடம் உள்ளது. தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ம.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள கையொப்பம் எதிர்மனுதாரருடையது அல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அல்லது அவரது மகள் அல்லது அவருடைய பேரன் யார் வாடகை செலுத்துகிறார்களோ அவர்கள் கையெழுத்து செய்வார்கள். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7 ஆவணத்தில் வாடகை செலுத்துபவர் பகுதியில் உள்ள கையொப்பம் எதிர்மனுதாரருடைய மகள் லதாவின் கையெழுத்து ஆகும். மேற்படி கையொப்பம் அவருடையது அல்ல என்றாலும், வழக்கிற்காக நானாக கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனு சொத்தின் அடிமனை எந்த கோயிலுக்கு சொந்தமானது என்றால் திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் அபிஷேகக்கட்டளைக்கு

சொந்தமானது. மேற்படி அபிஷேகக்கட்டளைக்கு பகுதி செலுத்தியதற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.3 ஆவணம் சொத்துவரி ரசீது மனு சொத்திற்கானது அல்ல என்றால் சரியல்ல. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே வாடகைதாரர் , உரிமையாளர் என்ற உறவுமுறை இல்லாத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாடகைப்பத்திரம் 1999 ல் எழுதப்பட்டது. பின்னிட்டு தற்போது எதுவும் எழுதப்படவில்லை. ம.சா.ஆ.2 ஆவணத்தில் 11 மாதங்கள் என்று குறிப்பிட்டு தான் வாடகை ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றாலும், பின்னிட்டு அது நீட்டிக்கப்படவில்லை என்றாலும் சரிதான். மேற்படி ம.சா.ஆ.2 ஆவணம் எதிர்மனுதாரரின் கையொப்பத்தை நாங்களாக போட்டு ஏற்படுத்திக் கொண்டது என்றாலும், அவ்வாறு உண்மையிலேயே எதிர்மனுதாரருடன் வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டிருக்குமேயானால் அது நீட்டிக்கப்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு எதுவும் ஏற்படாத காரணத்தினால்தான் மேற்படி வாடகை ஒப்பந்தம் உள்ளதாக சொல்வது நீட்டிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி காரணத்தின்படி நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.